DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, AMBATTUR
TIRUVALLUR DISTRICT

**STC.No.53/2025**
Deposition of Witness for – Prosecution : PW1
Defence:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சஜன்ராஜ் | | : |
| த/பெ | : புக்ராஜ் | மதம் | : |
| கிராமம் | : பாடி | தொழில் | : Finance |
| வட்டம் | : சென்னை | வயது | : 63/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

**தேதி – 06.03.2026**

**குறுக்கு விசாரணை: PW1**

எங்கள் நிறுவனத்தின் பெயர் Kusum syndicate ஆகும். அந்த நிறுவனத்தின் உரிமையாளர் ஆவேன். எங்கள் நிறுவனம் மத்திய அரசாங்கம் முறையே பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிரிக்கு எங்கள் நிறுவனம் கடன் கொடுத்துள்ளது என்றால் சரிதான். எதிரிக்கு எவ்வளவு கடன் வழங்கியுள்ளோம் என்றால் ரூ.13,00,000/-. எந்த தேதியில் கடன் எதிரிக்கு கொடுத்தோம் என்றால் 01.04.2019 ரூ.2,00,000/- ரொக்கமாகவும், மீதித்தொகை காசோலை மூலமாகவும் கொடுத்தோம். அவசர தேவை என்றால் பணமாகவும் வாங்குவார். எங்கள் நிறுவனத்தின் வருமான வரி கணக்கில் எதிரிக்கு கொடுத்த ரூ.13,00,000/-த்தை காண்பித்துள்ளோம். பொதுவாக எங்கள் நிறுவனத்தில் கடன் தரும்பொழுது பாதுகாப்பிற்காக காசோலை வாங்கும் பழக்கம் உள்ளதா என்றால் இல்லை. இந்த கடன் தொகைக்கு எதிரி எத்தனை காசோலை கொடுத்தார் என்றால் 5 கரூர் வைசியா வங்கி, பாடிக்கிளைக்குண்டான காசோலைகளை தொகை நிரப்பி, தேதி போடாமல் கையெழுத்திட்டு கொடுத்தார். எதிரி என்னிடம் வாங்கிய கடன் தொகையை முழுவதும் திருப்பி செலுத்திவிட்டார் என்றும்,

அவரிடம் பாதுகாப்பிற்காக வாங்கிய காசோலை நாங்களே நிரப்பி தவறாக பயன்படுத்தி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிக்கு 01.04.2019 ரூ.5,00,000/- மட்டும் தான் கடன் கொடுத்ததாகவும், அதையும் திருப்பி செலுத்திவிட்டார், கடன் வாங்கிய சமயம் கொடுத்த பாதுகாப்பு காசோலையை நானே நிரப்பி தவறாக பயன்படுத்தி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கூடுதல் வட்டித்தொகை கேட்டதற்கு எதிரி தராததால் அவர் மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

MAHASAKTHI K

Digitally signed by MAHASAKTHI K